## அமித் ஷா-வைக் கேட்காமல் மூச்சு கூட விடமாட்டார் எடப்பாடி பழனிசாமி!

# ‘திராவிடம்’ என்ற பேரில் இருக்கக்கூடிய ஃபேக் ஐ.டிதான் அ.தி.மு.க; அந்த ஃபேக் ஐ.டிக்கு அட்மின் அமித் ஷா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!

விழுப்புரம், டிச. 9-

**விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் உடனான சந்திப்பில், கழக இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், அங்கு இருக்கக்கூடிய ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியாகச் சென்று, அங்கு இருக்கக்கூடிய கழக நிர்வாகிகளைச் சந்திக்கின்ற, தலைவருடைய உத்தரவுக்கு இணங்க அந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம். அதில் இன்றைக்கு 15-வது தொகுதியாக இந்த விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்திருக்கிறேன். இந்த விழுப்புரம் மாவட்டம், நம் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நம் கழகத் தலைவர் அவர்களுக்கும், அவங்களுடைய மனதுக்கு மிக மிக நெருக்கமான மாவட்டம். 1940-களில் கலைஞர் அவர்கள் இந்த விழுப்புரத்தில் கிட்டத்தட்ட ஒரு மாதம் தங்கி, தன்னுடைய கொள்கை விளக்க நாடகங்களை நடத்தியுள்ளார்.

அதைவிட இன்னொரு பெருமை. 2003-இல் நம் கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணியின் செயலாளராக இருந்தபோது, இந்த விழுப்புரத்தில் நடந்த மண்டல மாநாட்டில்தான் முதன்முறையாகத் தலைமை ஏற்று அந்த மாநாட்டை நடத்தினார்கள். அந்த மாநாட்டை சிறப்பாக, வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்தான் அண்ணன் பொன்முடி அவர்கள். இன்னும் எனக்கு இன்னொரு பெருமை என்னவென்றால், நான் அரசியலுக்கே அப்போது வரவில்லை. கல்லூரியில் படித்துக்கொண்டு இருந்தேன். அப்போது முதன்முதலாக என்னை அழைத்துவந்து, இங்கு தலைவர் பேரில் இருக்கக்கூடிய ஒரு மன்றத்தில், கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு முன்பு, என்னை வைத்து ஒரு மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சியை, இதே விழுப்புரம் மாவட்டத்தில் அண்ணன் பொன்முடி அவர்கள் நடத்தினார்கள்.

இப்படி, பெருமைக்குரிய இந்த விழுப்புரம் மாவட்டத்தில் உங்களை எல்லாம் சந்திக்கின்ற இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். நான்கு நாட்களுக்கு முன்புதான் இந்த அறிவிப்பு வெளியானது. குறுகிய கால அறிவிப்பில், இவ்வளவு சிறப்பாக எழுச்சியோடு இந்த நிகழ்ச்சியை நடத்தி இருக்கக்கூடிய மாவட்டக் கழகத்தின் பொறுப்பாளர் லட்சுமணன் அவர்களுக்கும், மாவட்டக் கழகநிர்வாகிகளுக்கும்முதலில்என்னுடைய நன்றியையும் பாராட்டுகளை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நெருப்பாற்றை கடந்துள்ளது கழகம்!

கலைஞர் அவர்களின் பெருமையைப் பற்றி பேசும்போது நாம் அத்தனை பேரும் சொல்வோம், கழகம் சில தேர்தல்களில் தோற்று இருக்கலாம், வெற்றி வாய்ப்பை இழந்திருக்கலாம். ஆனால் எந்த நிலையிலும், தான் நின்ற தேர்தல் அனைத்திலும் வென்ற ஒரே தலைவர், உலகத்திலேயே நம் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்ற பெருமை உண்டு. நம் தலைவரைப் பற்றிப் பேசும்போது சொல்வோம், தான் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பு, கழகம் சந்தித்த அத்தனை தேர்தலிலும் கழகத்திற்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த ஒரே தலைவர் நம் தலைவர் என்ற பெருமை நமக்கு உண்டு. அந்த வெற்றி வாய்ப்புக்கு எல்லாம் காரணம், இங்கே வந்திருக்கக்கூடிய கழக உடன்பிறப்புகள் நீங்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது. நீங்கள் இல்லாமல் நம் கழகத் தலைவர் கிடையாது. நீங்கள் இல்லாம இந்த திராவிட மாடல் ஆட்சி கிடையாது.

இன்றைக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகம் பவள விழா கண்டிருக்கிறது. இளைஞர் அணியின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறோம். மாவட்டக் கழகத்தின் சார்பாக, தலைமைக் கழகத்தின் சார்பாக, ஒரு வருடம் மிகப்பெரிய நிகழ்ச்சிகளை நடத்தினோம். முப்பெரும் விழாவை நடத்தினோம். இளைஞர் அணி சார்பாக தி.மு.க-75 அறிவுத் திருவிழாவை நடத்தினோம். இந்த 76 வருடத்தில் எத்தனையோ போராட்டங்கள், சோதனைகள், நெருக்கடிகள், நெருப்பாற்றைக் கழகம் கடந்து வந்திருக்கிறது என்றால், அதற்கெல்லாம் காரணம், வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் நீங்கள்தான். இந்த 76 ஆண்டு கடந்த பிறகும் இன்றைக்கும் அதே வலிமையோடும், அதே இளமையோடும் நாம் மக்கள் பணி ஆற்றிக்கொண்டு இருக்கி றோம் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய களப் பணியாளர்கள் நீங்கள்தான் அதற்குக் காரணம். 2019, 2021, 2024 தேர்தல்களில் கழகம் வெற்றி பெற்றதற்கும் உடன்பிறப்புகளான நீங்களே காரணம்.

2021-இல் ஆட்சிக்கு வந்தவுடன், நம் தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி, முதல் நாள் ஐந்து கையெழுத்துகள் போட்டார். அதில் முதல் கையெழுத்து, மகளிருக்கான அந்த `விடியல் பயணத் திட்டம்’தான். அந்த விடியல் பயணத் திட்டத்தின்மூலம் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மகளிர் 850கோடிமுறைபயணத்தைமேற்கொண்டிருக்கிறார்கள். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. குறிப்பாக, இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 13 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆய்வறிக்கையின்படி ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின்மூலம் மாதம் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள்.

அதேபோல, ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இந்த முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெறு கிறார்கள். சமீபத்தில், இந்தத் திட்டத்தை அரசு உதவிபெறும் பள்ளிகளில் விரிவாக்கம் செய்தார்கள். அப்போது, அந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதற்கு பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் பகவான் சிங் அவர்கள் வந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இந்த திட்டத்தைப் பற்றி தெரிந்துகொண்டு, அவர் நம் முதலமைச்சர் அவர்களை வாழ்த்திப் பேசினார். `தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, இது ரொம்ப ரொம்ப சிறந்த திட்டம், நிச்சயம் அடுத்த வருடத்தில் இருந்து பஞ்சாப் மாநிலத்தில் இந்த திட்டத்தை நான் செயல்படுத்தப் போகிறேன்’ என்று பேசினார்.

### வழிகாட்டும் தமிழ்நாடு!

குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு வர வைத்துவிட்டோம். இப்போது பள்ளிக்கூடத்துக்கு வந்த குழந்தைகள், அடுத்து கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று நம் தலைவர் கொண்டுவந்த திட்டம்தான், `தமிழ்ப்புதல்வன்’, `புதுமைப்பெண் திட்டம்’ ஆகியவை. `அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் உயர்கல்வி படித்தாலும் ஊக்கத் தொகையாக மாதம் 1,000 நான் கொடுக்கிறேன்’ என்று முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இந்தத் திட்டங்களின் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் கல்வி ஊக்கத் தொகை பெறுகிறார்கள்.

கிராஸ் என்ரோல்மென்ட் ரேஷியோ (GER) என்று சொல்வார்கள். உயர் கல்விச் சேர்க்கை விகிதம். பள்ளிக்கூடம் முடித்து விட்டு எத்தனை பேர் உயர் கல்வி படிக்கச் சென்று சேர்கிறார்கள்? அதுதான், ஜி.இ.ஆர். என்று சொல்வார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், டபுள் டிஜிட் வருவதே பெரிய சாதனை. கேரளா மாநிலம் 10-லிருந்து 20 சதவிகிதத்துக்குள் வரும். இன்றைக்கு, தமிழ்நாடு கிட்டத்தட்ட 45 சதவிகிதத்தோடு இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கை விகிதத்தில் நம்பர் ஒன் இடத்தில் நம் தமிழ்நாடு இருக்கிறது.

இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு, இரண்டு மாதங்களுக்கு முன்பு தெலங்கானா மாநிலத்தின் முதலமைச்சர் திரு.ரேவந்த் ரெட்டி அவர்கள் வந்திருந்தார். அவர் இந்த திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டு, மாணவர்களோடு உரையாற்றிவிட்டு அவர் சொன்னார், `தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, இது மிக மிக சிறப்பான திட்டம்; கல்விக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். இந்தத் திட்டத்தை அடுத்த கல்வி ஆண்டிலிருந்து தெலங்கானா மாநிலத்தில் நான் அறிமுகப்படுத்துகிறேன்’ என்று தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி அவர்கள் பாராட்டினார். இப்படி, மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் எடுத்துக்க்காட்டாக இருப்பவர்தான் நம் முதலமைச்சர், தலைவர் அவர்கள். அந்த முதலமைச்சரை தமிழ்நாட்டுக்குக் கொடுத்தது, இங்கே வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான். அந்தப்புகழ் உங்களுக்குத்தான் சேரும்.

`மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத்தொகை கொடுப்போம்’ என்று நம் தலைவர் அவர்கள் சொன்னார். ஆட்சிப் பொறுப்பு ஏற்றோம். கடும் நிதி நெருக்கடி. அ.தி.மு.க. அரசு எவ்வளவு கடன் சுமையில் வைத்துவிட்டுச் சென்றது என்பது உங்களுக்குத் தெரியும். ஆட்சிக்கு வரும்போது, கோவிட் பெருந்தொற்று இரண்டாவது அலை. எதிர்கட்சிகள் மகளிர் உரிமைத்தொகை கொடுக்க மாட்டார், தி.மு.க. அரசு கொடுக்காது, அதற்கு வாய்ப்பே இல்லை! என்று நம்மை விமர்சித்தார்கள். ஆனால் இரண்டு வருடங்க ளுக்கு முன்பு, 2023 செப்டம்பர் 15-ஆம் தேதி, பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் நம் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்தினார். இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். கடந்த மாதத்துடன் 27 மாதங்கள், 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு 27,000 ரூபாயை நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

அதில் சில குறைகள் இருந்தது. அதைத் தீர்ப்பதற்குத் தலைவர் அவர்கள் `உங்களுடன் ஸ்டாலின்’ என்ற முகாம்கள் நடத்தினார். கிட்டத்தட்ட அதில் 30 லட்சம் மகளிர் அதற்கு மீண்டும் விண்ணப்பித்திருக்கிறார்கள். வருகிற டிசம்பர் 12-ஆம் தேதியிலிருந்து அந்த விடுபட்ட மகளிருக்கும் சேர்த்து, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கொடுக்கப்போகிறார், நம் தலைவர் அவர்கள். இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 60 ஆயிரம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப் பட்டுள்ளது.

### விழுப்புரத்திற்கு தந்த சாதனைத் திட்டங்கள்!

இந்த விழுப்புரம் தொகுதியில் 8 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் எல்.இ. சத்திரம் அணைக்கட்டை கட்டியிருக்கிறது, நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு. விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தி ருக்கிறோம். விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் 3.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைத்துக் கொடுத்திருக்கி றோம். கோழியனூர் ஒன்றியம் பில்லூரில், சுமார் 8.5 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலம் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

21 சமூக நீதி போராளிகளுக்கு மணி மண்டபம் கட்டிக் கொடுத்தது நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஐயா, ஏ.கோவிந்தசாமி அவர்களுக்குத் திருவுருவச் சிலை வைத்தது நம் அரசுதான். விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரி, எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கூடுதல் கட்டடங்களையும் நம் அரசு கட்டிக் கொடுத்திருக்கிறது. இதுபோன்ற பல வளர்ச்சித் திட்டங்களை இன்றைக்கு விழுப்புரம் தொகுதியில் நம் ஆட்சியில், முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்.

இது மாதிரியான பல்வேறு முற்போக்கான திட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக, நம்பர் ஒன் மாநிலமாக, நம் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு சிறந்த உதாரணம், இதுவரைக்கும் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, 11.19 சதவிகித வளர்ச்சியுடன், அதாவது இரட்டை இலக்க வளர்ச்சியை நம் தமிழ்நாடு மாநிலம் இன்றைக்கு அடைந்திருக்கிறது. இதையெல்லாம் பார்த்து பொறுக்க முடியாத ஒன்றிய பா.ஜ.க அரசு, அதனுடைய அடிமைகள்தான் எப்படியாவது தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது ஒரு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்று பல்வேறு வகையில் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

### உரிமைகளைப் பறிக்கும் பா.ஜ.க.!

நிதி உரிமை, மொழி உரிமை, கல்வி உரிமையை எப்படியாவது பறிக்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். இந்தப் புதிய கல்விக் கொள்கை ஏற்றுக் கொண்டால்தான் தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய வரிப்பகிர்வைக் கொடுப்போம் என்கிறார்கள். இது ஒண்ணும் ஒன்றிய அரசு சும்மா கொடுக்கிற காசு கிடையாது. தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசுக்குக் கட்டி இருக்கக்கூடிய வரியைப் பிரித்துக் கொடுக்க வேண்டியது ஒன்றிய அரசின் வேலை.

2,500 கோடி ரூபாயைக் கொடுக்க முடியாது என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாகச் சொன்னார். `மற்ற மாநிலங்கள் எல்லாம் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டது. ஆனால், தமிழ்நாடு மட்டும் ஏற்றுக்கொள்ள வில்லை, ஏன்?’ என்றால், நம் தலைவர் தெளிவாகச் சொன்னார், “நீங்கள் புதிய கல்விக் கொள்கை மூலமாக மீண்டும் தமிழ்நாட்டுக்குள் குறுக்கு வழியில் ஹிந்தி திணிப்பைக் கொண்டுவர முயற்சிக்கிறீர்கள். புதிய கல்விக் கொள்கை மூலமாக மீண்டும் சமஸ்கிருதத்தை தமிழ்நாட்டுக்குள் நுழைக்கப் பார்க்கிறீர்கள். புதிய கல்விக் கொள்கை மூலமாக மீண்டும் நாம் விரட்டி அடித்த குலக்கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டுக்குள் கொண்டுவரப் பார்க்கிறீர்கள். 2500 கோடி தரவில்லையென்றாலும் பரவாயில்லை. நீ 10,000 கோடி கொடுத்தாலும் எந்தக் காலத்திலும் நான் தமிழ்நாட்டுக்குள் புதிய கல்விக் கொள்கையை நுழைய விடமாட்டேன் என்று சொல்லி இன்றைக்கு சட்டப் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருப்பது, நம் முதலமைச்சர் அவர்கள்.

இன்றைக்கு, மற்ற மாநில முதலமைச்சர்கள் நம் முதலமைச்சரைப் பாராட்டுகிறார்கள். அவர்களும் இன்றைக்குப் புதிய கல்விக் கொள்கையை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு, ஒன்றிய அரசு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், மற்ற மாநில முதலமைச்சர்கள், மற்ற மாநில மக்கள், தமிழ்நாடு என்ன முடிவெடுக்கிறது, தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறார் என்று பார்க்கிறார்கள். அவர் எடுக்கிற முடிவு சரியாக இருக்கும் என்று இன்றைக்கு மற்ற மாநில முதலமைச்சர்கள் பாராட்டுகிற விதமாக, நம் முதலமைச்சர்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார். தொகுதி மறுவரையறைத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதை முதன் முதலாக எதிர்த்துக் குரல்கொடுத்தது, நம் தலைவர் அவர்கள்தான். இந்தியாவிலேயே முதல் கட்சியாக எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம். மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தியதால், நம் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறைத்து, நம் மாநில உரிமையைக் குறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள்.

### அ.தி.மு.க. அல்ல அமித் ஷா தி.மு.க.!

இன்றைக்கு, எஸ்.ஐ.ஆர். என்று ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, ஒன்றிய பா.ஜ.க. அரசு தேர்தல் ஆணையம் மூலமாக நம் வாக்குரிமையைப் பறிக்கிறார்கள். இந்த எஸ்.ஐ.ஆர். திட்டத்தின் மூலமாக அவர்களுடைய முழு நோக்கமே பா.ஜ.க-வுக்கு எதிராக இருக்கக்கூடிய, பா.ஜ.க-வுக்கு எதிராக வாக்களிக்கக்கூடிய இஸ்லாமிய மக்கள், மகளிர், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குரி மையை எப்படியாவது தடுத்துப் பறித்துவிட வேண்டும் என்பதுதான் எஸ்.ஐ.ஆர் திட்டத்தின் நோக்கம். இன்றைக்கு, இந்த விழுப்புரம் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் எஸ்.ஐ.ஆர். பணிகளை நம் கழக உடன்பிறப்புகள், நீங்கள் மிகச் சிறப்பாகச் செய்துகொண்டு வருகிறீர்கள், அதற்கு என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள். இந்தப் பணியை நாம் பாதி செய்து முடித்திருக்கிறோம். இதுவே, நிச்சயம் இந்த விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில், நம் வெற்றியை நிச்சயம் உறுதிசெய்துவிடும். எஸ்.ஐ.ஆர். பணிகளை சிறப்பாகச் செய்த உங்களுக்கு, முதலில் என்னுடைய பாராட்டுகள், கழக நிர்வாகிகளுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

நாம் எஸ்.ஐ.ஆர்-ஐ எதிர்க்கிறோம். ஆனால், இன்றைக்கு எடப்பாடி பழனிசாமி அவர்கள்எஸ்.ஐ.ஆர்.-ஐஆதரித்துக்கொண்டு இருக்கிறார். ஏனென்றால், எடப்பாடி பழனிசாமி அமித் ஷாவுக்கு எதிராக மூச்சுகூட அவரை கேட்காமல் விட முடியாது. அந்த அளவுக்கு அமித்ஷாவின் அடிமையாக, முதுகெலும்பு இல்லாத ஒரு அடிமையாக எடப்பாடி பழனிசாமி அவர்கள் இன்றைக்கு இருக்கிறார். இன்றைக்கு, பா.ஜ.க-வின் ஒரு கிளை அமைப்பாக அ.தி.மு.க. செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அ.தி.மு.க. என்று சொல்லும்போது, நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று நினைத்துவிடக் கூடாது. இன்றைக்கு அது அமித் ஷா தி.மு.க. வாக மாறிக்கொண்டு இருக்கிறது. அ.தி.மு.க. ஒரு இயக்கம் அல்ல, அது ஒரு கட்சி அல்ல, அது வெறும் ஒரு கிளை. பா.ஜ.க-வின் கிளை அமைப்பாக இன்றைக்கு இருக்கிறது.

உங்கள் மாவட்டத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை வந்தது என்றால், இங்கு இருக்கக்கூடிய ஒன்றியச் செயலாளரைச் சென்று பார்ப்போம். பெரிய பிரச்சினை என்றால் மாவட்டச் செயலாளரைச் சென்று பார்ப்போம். ரொம்ப பெரிய பிரச்சினை என்றால் அண்ணா அறிவாலயத்துக்குச் சென்று, அமைப்புச் செயலாளரைப் பார்த்து கடிதம் கொடுப்பீர்கள். இதுதான் அனைத்து கட்சிகளிலும் இருக்கின்ற நடைமுறை. ஆனால், இன்றைக்கு அ.தி.மு.க-வைப் பார்த்தீர்கள் என்றால், அவங்களின் தலைமை அலுவலகம் சென்னை, ராயப்பேட்டையில் இருக்கிறது என்று நாம் நினைப்போம். அவர்களின் உண்மையான தலைமை அலுவலகம், இப்போது டெல்லியில் இருக்கக்கூடிய அமித் ஷாவின் வீட்டில்தான் இருக்கிறது. விமானத்தைப் பிடித்து, நான்கு கார் மாறிப் சென்று அமித் ஷா காலடியில் விழுந்து பஞ்சாயத்தை முடித்துவிட்டு வருகிறார்கள். உலகத்திலேயே ஒரே கரகாட்டக் கோஷ்டி என்றால், தன்னுடைய கட்சிப் பிரச்சினைக்கு டெல்லி வரைக்கும் சென்று, அங்கு பஞ்சாயத்தைக் கூட்டி, அங்கு என்ன முடிவெடுக்கிறார்களோ அதை இங்கு செயல்படுத்தியிருக்கக்கூடிய ஒரே இயக்கம் இன்றைக்கு அ.தி.மு.க. என்று சொன்னால் அது மிகையாகாது.

### ஃபேக் ஐ.டி.தான் அ.தி.மு.க!

சமீபத்தில், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள் ஆன்மீகப் பயணம் போகிறேன், ஹரித்வார் போகிறேன் என்று சொல்லிட்டு, அமித் ஷாவைப் பார்த்துவிட்டு வந்து, அவருடைய அனுமதியை வாங்கி, இன்றைக்கு வேறொரு இடத்திற்கு சென்று சேர்ந்திருக்கிறார். முன்பெல்லாம் இவர்கள் திருட்டுத்தனமாகச் சென்றார்கள். இப்போது சொல்லிவிட்டே செல்கிறார்கள். அடுத்து, ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் என்ன முடிவெடுக்கப் போகிறார் என்று தெரியவில்லை. தமிழ்நாட்டுக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன சொன்னாலும், அதற்கு ஆமா சாமி போகிடுற ஒரே வேலையை இன்றைக்கு அ.தி.மு.க. செய்துகொண்டு இருக்கிறது.

எடப்பாடி பழனிசாமி அவர்கள், இன்றைக்கு அ.தி.மு.க-வில் இருக்கிறாரா? இல்லை பா.ஜ.க-வில் இருக்கிறாரா, இல்லை ஆர்.எஸ்.எஸ்.காரராவே மாறிட்டாரா என்று இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணா வும் இல்லை, திராவிடமும் இல்லை, முன்னேற்றமும் இல்லை, இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு அந்தக் கழகத்தில் யாருமே இல்லை. அந்த நிலைமை இன்றைக்கு அ.தி.மு.க.வுக்கு உருவாகி இருக்கிறது. ஃபேஸ்புக்கில் பார்த்தீர்கள் என்றால், ஃபேக் ஐ.டி. என்று நிறைய பேர் சுற்றுவார்கள். வெறும் பெயரை மட்டும் வைத்துக்கொள்வார்கள். உண்மையாக, அப்படி ஒரு ஆள் இருக்க மாட்டார்கள். அதுமாதிரி இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலில் ‘திராவிடம்’ என்ற பேரில் இருக்கக்கூடிய ஃபேக் ஐ.டி.தான் அ.தி.மு.க என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த ஃபேக் ஐ.டி.-க்கு உண்மையான அட்மினாக யார் இருக்கிறார் என்று பார்த்தீர்கள் என்றால், திரு அமித்ஷா அவர்கள்தான். அப்படிப்பட்ட ஒரு முழு சங்கியாக எடப்பாடி பழனிசாமி மாறிவிட்டார். இனிமேல் எடப்பாடி பழனிசாமி அவர்கள் டெல்லிக்குப் போகும்போது, கர்ச்சீப்பால் முகத்தை மூடவேண்டிய அவசியம் இருக்காது. இனிமேல், வெளிப் படையாவே அமித் ஷா அவர்களை சென்று பார்க்கலாம். அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்கலாம்.

### சங்கிகளின் பருப்பு வேகாது!

விவசாய நிலத்தைக் குத்தகைக்கு விட்டு நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதாவது, நிலம் ஒருவருடையாதாக இருக்கும், ஆனால் விவசாயம் இன்னொருத்தர் பார்ப்பார். அதுமாதிரி இன்றைக்கு அ.தி.மு.க.-வை அமித் ஷா அவர்கள் குத்தகைக்கு எடுத்து, அ.தி.மு.க. அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதனால்தான்



தொடர்ச்சி 9ஆம் பக்கம்